வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

ந.க.எண்.2322/ஆ2/2025 நாள்:17.10.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்– உடற்கல்வி– 2025–2026 ஆம் கல்வியாண்டில் மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகள்–நடைபெறும் இடம் தேதி போன்ற விவரங்கள் மற்றும் மாணவர்கள்/ அணி மேலாளர்களுக்கான அறிவுரைகள் வழங்குதல்– சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018655/எம்2/இ2/2025 நாள்: 02.07.2025.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை நாள்: 08.07.2025.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012155/எம்2/இ2/2025 நாள்: .09.2025.
4. தஞ்சாவூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.4772/ஆ4/2025 நாள்:16.10.2025, 24.10.2025, 25.10.2025.

-----

பார்வை(3)&(4)–இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 2025–2026–ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS)24.10.2025–29.10.2025 வரை நடைபெறவிருந்த போட்டிகள் கனமழை எச்சரிக்கை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு கீழ்காணும் அட்டவணையின் படி நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| போட்டி | நடைபெறும் தேதி | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| தடகளம் | 29.10.2025 முதல் 31.10.2025 வரை | மாணவிகள் U 14/17/19 | அன்னை சத்யா விளையாட்டரங்கம், தஞ்சாவூர் மாவட்டம். |
| | 01.11.2025 முதல் 03.11.2025 வரை | மாணவர்கள் U 14/17/19 | |

எனவே இப்போட்டிகளில் பங்குபெறவுள்ள மாணவ/மாணவியர்களை பார்வை(1)&(2)–இல் தெரிவிக்கப்பட்டுள்ள SOP வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி உரிய நேரத்தில் பாதுகாப்பான முறையில் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்க வண்ணம் பங்குபெறச் செய்யுமாறு அணிமேலாளர்களுக்கு அறிவுறுத்திடவும், மேலும் இப்போட்டியில் நடுவர்களாக பங்குபெறவுள்ள இணைப்பில் காணும் வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த உடற்கல்வி இயக்குநர்/ஆசிரியர்களை பணிவிடுவிப்பு செய்திடவும் பள்ளி தலைமையாசிரியர் /முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
1. மாணவ/மாணவியர்களின் பெயர் பட்டியல்.
2. போட்டிக்கான விதிமுறைகள் அணிமேலாளர்களுக்கான அறிவுரைகள் & தங்கும் இடம்.
3. நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்– SOP.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்.
வேலூர் மாவட்டம்.

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
(இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது).